# மதியிறுக்கம் (Autism)

மதியிறுக்கம் (*Autism*) அல்லது புற உலகச் சிந்தனைக் குறைபாடு அல்லது தன்னுழப்பல் என்பது ஒருவருடைய மக்கள் தொடர்பு திறன், சமுதாய அரங்கில் செயல்பாடுகள், ஆர்வம் கொள்ளும் துறைகள், நடத்தைப் பாங்கு போன்றவை இயல்பிற்கு மாறாக அமைவதற்குக் காரணமான மூளை வளர்ச்சி வேறுபாட்டைக் குறிக்கும். மதியிறுக்கத்தின் குறிப்பிட்ட மருத்துவக் காரணங்கள் முழுமையாக அறியப்படாவிட்டாலும், ஆய்வாளர்கள் சுற்றுச்சூழல் காரணிகளின் பாதிப்புக்கு ஒருவர் உள்ளாகும் வண்ணம் அமையும் மரபுக் கூறுகளினாலேயே இவ்வேறுபாடு ஏற்படுகிறது எனக் கருதுகின்றனர். சுற்றுச்சூழல் காரணிகளின் தன்மை, பருமை (magnitude), இயக்கமுறை ஆகியவற்றைப் பற்றி முரண்பாடான கருத்துக்கள் நிலவி வந்தாலும் ஏழு முதன்மையான மரபணுக்கள் காரணிகளாக அறியப்பட்டுள்ளன.

மனஇறுக்கம் (Autism) என்பது, குழந்தைகளிடத்தில் காணப்படுகின்ற  ஒரு வகை மன நோயாகும். மனஇறுக்கத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மிகவும் வித்தியாசமாக நடந்துகொள்கிறார்கள், உதாரணமாக அவர் கள்  ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் கூறுகின்றனர்.

பெரும்பாலும் ஒன்று முதல் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை இந்த நோய்  பாதிக்கிறது. ஆட்டிஸ்டிக் குழந்தைகள்  சாதாரண குழந்தைகளை காட்டிலும் பெரிதும் வேறுபட்டு இருக்கின்ற னர்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி 2008 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் 2 ஆம் தேதியை மக்கள் ஆட்டிசம் விழிப்புணர்வு தினமாகக் கொண்டாடுகின்றனர். இதன் பேரில் நீல நிறம் மன இறுக்கத்தின் (Autism) அடையாளமாக கருதப்படுகிறது. இந்தியாவில் ஒவ்வொரு 110 குழந்தைகளில் ஒரு குழந்தை மன இறுக்கத்தால் பாதிக்கப்படுகிறது  என்று சமூக நீதி மற்றும்

அதிகார அமைச்சகம் (Ministry of social justice and empowerment) தெரிவிக்கின்றது. இந்த நோய் பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளையே அதிகமாக பாதிக்கின்றது.

எளிமையாக சொல்வதென்றால் பார்ப்பதற்கு ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் நம்மை போலவே தான் இருப்பார்கள். ஆனால் நாம் பேசுவதை புரிந்து கொள்வதிலும், அவர்கள் பேசுவதிலும், எல்லாருடனும் கலந்து பழகுவதிலும் இவர்களுக்கு சிக்கல் இருக்கும். இந்த குறைபாட்டை முற்றிலும் சரி செய்யும் வகையில் சிகிச்சை இல்லை என்றாலும், ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் வாழ்க்கையை நன்றாகவே மேம்படுத்த முடியும். ஒரு குழந்தைக்கு ஆட்டிசம் பாதிப்பு இருப்பதை 10 மாதங்கள் முதலே கண்டறியலாம்.

**மதியிறுக்கமுள்ள குழந்தைகளை அடையாளம் காணுதல்**

- தன் வயதொத்தவர்களுடன் நட்புணர்வு கொள்வதிலும் சமூகத் திறன்களை வெளிக்காட்டுவதிலும் ஈடுபாடற்று இருத்தல்.
- சிலவகைச் செயல்பாடுகள் செய்வதில் சிக்கல்.
- அவர்களது நடத்தை மற்றும் பிறரை எதிர்கொள்ளும் விதத்தில் கேலிக்கு ஆளாதல்.
- பிறருடன் பொருந்திச் செல்லாமல் தனித்து இருத்தல் ( உணவு, விளையாட்டு போன்றன).
- தங்களது நடத்தையானது மற்றவர்களை எவ்விதம் பாதிக்கிறது என அறியாதிருத்தல் (மற்றவர்கள் கருத்தை மறுத்துப் பேசுதல், அதிக சத்தத்துடன் பேசுதல், மற்றவர்களோடு இணைந்து செல்ல மறுத்தல், தேவையற்ற விமரிசனம் செய்தல், சிறு இழப்பிற்காகக் கூட அதிகமாக அழுது ஆர்ப்பாட்டம் செய்தல் போன்றவை).
- அன்றாட வேலைகளில் ஏற்படும் சிறு மாற்றத்தைக் கூட எதிர்கொண்டு சமாளிப்பதில் சிக்கல்.

- இவர்கள் தன்போக்கிலேயே செயல்படவேண்டும் என நினைப்பர். அதனால் சமூகத்திறன்களில் குறைபாடுடையவர்களாக இருப்பர்.
- பரபரப்பான சத்தம் நிறைந்த சூழல்களில், (எ.கா. விளையாடுமிடம்) மிகவும் படபடப்புடன் காணப்படுவார்கள்.
- சிலருக்கு சிலவகைத் துணிகள் அணிவதிலோ அல்லது தங்கள் உடல் மேல் உடை உராயும்போதோ சிரமம் ஏற்படும்.
- தனிமையை விரும்புவார்கள். மற்றவர்களிடம் இருந்து விலகியே இருப்பார்கள்.
- முகம் பார்த்து பேசும் இயல்பு இவர்களிடம் இருக்காது. சிலருக்கு தாய்ப்பால் குடிக்கும் தருணத்திலும் இந்த இயல்பு இருக்கும்.
- மாற்றத்தை விரும்பாதவர்கள். வீட்டில் இருக்கும் சின்னச்  சின்ன பொருட்களைக்கூட அவர்கள் மாற்றிவைக்க அனுமதிக்க மாட்டார்கள்.
- நீங்கள் எவ்வளவு சத்தம் போட்டுப் பேசினாலும் அதற்கு கவனம் செலுத்த மாட்டார்கள். சில பெற்றோர்கள், தங்கள் குழந்தைக்கு காது கேட்கவில்லை என்று நினைப்பார்கள். ஆனால்  உண்மையில் ஆட்டிச குழந்தைகளுக்கு காதில்  குறைபாடு இருக்காது .
- அடிபட்டால் அவர்களின் வலியைக் கூட வெளிக்காட்டமாட்டார்கள். சில குழந்தைகள் சாதாரணமான அடிக்கு கூட ஊரையே கூட்டி விடுவார்கள்.
- ஆபத்தைப் பற்றிய பயம் இவர்களுக்கு இருக்காது.

**மன இறுக்கத்திற்கான சிகிச்சைகள் யாவை? (What are the treatments for autism in Tamil?)**

மனஇறுக்கத்தை குணப்படுத்த  சிகிச்சை ஏதுமில்லை. எனினும் பின்வரும் இரண்டு சிகிச்சை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நன்மை பயக்கிறது, அவை :

1) **நடத்தை மற்றும் சமூக தொடர்பு வழி சிகிச்சை (Behavioural and communication therapy**)– இந்த சிகிச்சையில் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மக்களுடன் எவ்வாறு பேசுவது, சமூக அமைப்புகளில் தன்னைதாமே எவ்வாறு கவனித்து கொள்வது, மற்றவர்களைச் சுற்றி இருக்கும் போது எப்படி நடந்துகொள்வது போன்ற குணங்கள் கற்பிக்கப்படுகின்றது.

2) **கல்வி வழி சிகிச்சை (Educational therapy**)– ஆட்டிசம் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி (Special education) வழங்கப்படுகிறது. அவர்களுக்கு சிறப்பு கல்வியை கற்பிக்க பல நிபுணர்கள் அடங்கிய சிறப்பு குழு உள்ளது.

**ஆட்டிசத்திற்கான காரணங்கள்:**

ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் கோளாறுக்கான காரணங்கள் அறியப்படவில்லை. ஆனால் அதைத் தூண்டும் காரணிகளை கண்டறிவதற்கான ஆராய்ச்சிகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சில அரிய மரபணு மாற்றங்கள், சுற்றுச்சூழல் அழுத்தங்கள், கருத்தரிக்கும்போது பெற்றோரின் வயது, கர்ப்ப காலத்தில் தாய்வழி நோய்கள், பிறக்கும்போது ஏற்படும் சிரமங்கள், குழந்தையின் மூளைக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை போன்ற பல காரணிகளும் நோயின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை இல்லாதது, நகர்ப்புற வாழ்க்கையில் குழந்தைகளை சரியாக பராமரிக்க பெற்றோர் நேரம் ஒதுக்காதது, செல்போன், டிவி, வீடியோகேம், லேப்டாப் போன்ற காட்சித்திரை சார்ந்த பொருட்களில் அதிக நேரம் செலவிடும் குழந்தைகள் உடல்திறன் சார்ந்த விளையாட்டுகளிலோ, நடவடிக்கைகளிலோ ஈடுபடாமல் இருப்பது போன்ற காரணங்களால் ஆட்டிசம் போன்ற பாதிப்புகள் ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.